

திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவேற்காடு நகர இளைஞர் அணி சார்பில் மாதிவேடு பகுதியில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை தெருமுனைக் கூட்டம் நகரச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமையில் நகர இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.சங்கர் வரவேற்பில் நடைபெற்றது இக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அரசின் சாதனை விளக்கி சிறப்புரையாற்றினார் உடன் கழக பேச்சாளர் மதிமாறன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபுகஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட நிர்வாகிகள் காயத்திரி ஸ்ரீதரன், ஏ.ஜெ.பவுல், ப.ச.கமலேஷ், எம்.பன்னீர்செல்வம், குமாரசாமி, சாது, ஜெ.சரவணன், பாண்டுரங்கன், செல்லதுரை, பானு அரசு, உமாபாதி, தெய்வசிகாமணி, பரிசமுத்து, நளினிகுரு, கே.பி.எஸ்.சுதாகர், பி.வி.கே.கண்ணன், ராங்துரை, காந்தி, சத்திய கிரி, இளங்கோ, ஜெகன், சுடலை மணி, வெல்டிங் ராஜா, என்.ராஜி, நாராயணன், மணிக்கராஜ்,அமலேஸ்வரி,பேபி ஸ்ரீ, உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### புதிய பாஸ்போர்ட் பெற

# ராகுல் காந்திக்கு தடையில்லாச் சான்றிதழ்!

## டெல்லி நீதிமன்றம் வழங்கியது!

புதுடெல்லி, மே. 27 -

பா.ஜனதா தலைவர் சுப்பிரமணியசாமி தொடர்ந்த நேஷனல் ஹெரால்டு வழக்கில் ராகுல் காந்தி உள்ளிட்டோருக்கு கடந்த 2015ம் ஆண்டு டிசம்பர் 19ந்தேதி ஜாமீன் வழங்கப்பட்டது. இதற்கிடையே அவதூறு வழக்கில் தண்டனை பெற்றதால் ராகுல் காந்தியின் எம்.பி. பதவி பறிக்கப்பட்டது. இதையடுத்து தனது ராஜதந்திர பயண பாஸ்போர்ட்டை ஒப்படைத்த அவர் புதிதாக சாதாரண பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்துள்ளார். இதற்காக தடையில்லா சான்றிதழ் வழங்குமாறு டெல்லி கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கில் சுப்பிரமணியசாமி பதில் மனு தாக்கல் செய்ய கோர்ட்டு அனுமதி அளித்ததுடன், ராகுல் காந்தியின் மனு மீதான விசாரணையை ஒத்திவைத்தது. அதன்படி இவ்வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, புதிய பாஸ்போர்ட் பெறுவதற்காக ராகுல் காந்திக்கு தடையில்லா சான்று வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டது. ராகுல் காந்தியின் கோரிக்கையை ஏற்பதாகவும், ஆனால் அவர் கேட்ட 10 வருடங்களுக்கு அல்லாமல் 3 வருடங்களுக்கு தடையில்லா சான்று வழங்குவதாகவும் நீதிபதி தெரிவித்தார்.

# சன்மார்க்க அரசியல்!

என் இனிய தமிழ் சொந்தங்களே......!

இது செங்கோல் பற்றிய என் கருத்து! கோல் உயர்ந்தால் கோன் உயர்வான்....கோன் உயர்ந்தால் குடி உயரும்! இங்கே கோல் என நமது அவ்வை பாட்டி சொல்வது மன்னரின் கையில் இருக்கும் செங்கோலைத் தான்! இது பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்டது!

தமிழனுக்கு செங்கோல் ஒன்றும் புதிதானதல்ல! கண்ணகி பாண்டிய மன்னனின் அவைக்குள் நுழைந்ததும் ஆட்டம் கண்டது முதலில் செங்கோல்தான்! அவ்வையார் செங்கோல் எப்போது உயரும் என்று சொல்லியிருக்கிறார்! வரப்புயர நீர் உயரும்.....நீர் உயர நெல் உயரும்...நெல் உயர கோல் உயரும்! எப்போது நீரும் வரப்பும் உயரும்! விவசாயி வயலிலே இறங்கி உழைத்தால் தான்!

டெல்லியிலே விவசாயிகள் போராட்டம் மாதக் கணக்கில் அல்ல.....வருடக் கணக்கில் தொடர்ந்தது! எத்தனை விவசாயிகள் இறந்து போனார்கள்? அப்போது இந்த செங்கோல் யார் கையில் இருந்தது? வரப்பு உயர்வதற்கு பதிலாக விவசாயிகள் சாவு எண்ணிக்கை தான் உயர்ந்தது! இதனை ஒன்றிய அரசு மறுக்க முடியுமா? வள்ளுவன் குறளிலே எந்த இடத்திலாவது தமிழ்....தமிழன்....தமிழ்நாடு என எழுதிஇருக்கிறாரா? இல்லை! அதனால் தான் திருக்குறள் உலக மறையானது! வள்ளுவரும் செங்கோலைப் பற்றி பல குறள்களில் சிறப்பாக சொல்லியிருப்பது உண்மைதான்! ஆனால் எங்கேயாவது ஆதீனங்கள் வேதம் ஓதி அதன் பின்னரே செங்கோல் வழங்கப்பட வேண்டும் என எழுதியிருக்கிறாரா? அண்மையில் இங்கிலாந்து இளவரசரின் முடிசூட்டு விழா நடந்தது....அங்கேயும் அவர் கையில் செங்கோல் தரப்பட்டது! அந்த செங்கோலின் மேல் பசுவின் சிலை இருந்ததா? இங்கே தரப்படுகின்ற செங்கோலின் மேல் பசுவோ எருதுவோ இருப்பதை கவனித்தீர்களா? இது எதற்காக?

இந்தியா மதச்சார்பற்ற நாடு என நமது அரசியல் சாசனம் சொல்கிறது! அப்படி இருக்க எப்படி காவி அணிந்த ஆதீனங்கள் மட்டும் வேதம் ஓதி செங்கோலை கொடுக்கலாம்! மற்ற மதத்தலைவர்களும் சேர்ந்துதானே கொடுக்க வேண்டும்! 1947 இல் சுதந்திரம் அடைந்து ஆள்பவர்கள் மாறியதற்கு அடையாளமாக நேரு அவர்களிடம் செங்கோல் வழங்கப்பட்டது! தற்போது கட்டிடம் மட்டும்தானே மாறப்போகிறது! பழைய பிரதமர் தானே புதிய கட்டிடத்திலும் பிரதமராக செயல்பட போகிறார்! செங்கோல் பழைய கட்டடத்தில் இருந்து புதிய கட்டிடத்திற்கு இடம் மாறலாம்.....எதற்காக பிரதமர் கைக்கு மாற வேண்டும்? ஒருவேளை இங்கிலாந்தில் நடந்தது போல் நமது பிரதமர் மன்னராக முடிசூட்டி கொள்ளப் போகிறாரா? அல்லது புதிய கட்டிடத்தில் அடுத்த தேர்தலில் வேறு கட்சி ஆட்சிக்கு வரப் போகிறது என்பதனைப் புரிந்து கொண்டு அதற்கு முன்னால் ஆதீனங்கள் வேதம் ஓதிஅவர்கள் கையால் செங்கோலை வாங்கிப் பார்த்து விட வேண்டும் என்ற ஆசையா? அதுவும் வரவேற்கத்தக்கது தான் என மக்கள் பேசிக் கொள்வது என் காதிலும் விழுகிறது!

ஒரு சிறிய சந்தேகம்.....இங்கே அந்தணர்கள் தவிர்க்கப்படுவது ஏன்? மன்னர்களின் அடுத்த நிலை ராஜ குருக்களாக வந்து சேர்ந்த ஐயர்களும் ஐயங்கார்களும் தற்போது ஒன்றிய ஆட்சியாளர்களால் இந்த விழாவில் தவிர்க்கப்படுவது தமிழக மக்களை ஏமாற்றுவதற்காகவா? செங்கோலின் சிறப்பு.....கார்ப்பரேட்டுகளின் இமாலய வளர்ச்சி அல்ல.....இந்திய ஏழை எளிய மக்களின் மகிழ்ச்சியே! மூதறிஞர் ராஜாஜி அவர்களின் அறிவுரையை ஏற்று வேதம் ஓதி ஆதீனங்கள் செங்கோலை வழங்க நேரு அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டார்கள்! அதன் பின் தொடர்ந்தது சன்மார்க்க அரசியலே! அதேபோல் மோடி அவர்களும் தொடராமல்..புதிய கட்டடத்துக்கு வந்த பின்னால் இந்திய அரசியல் சாசனத்தை மதித்து ஆட்சி முறையில் நல்ல மாற்றம் கொண்டு வர வேண்டும் என்பதே இந்திய மக்களின் ஏகோபித்த விருப்பமாகும்!



**வி.செ.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்

### குடியரசுத் தலைவர் பெயரைக் கூட

# அழைப்பிதழில் அச்சிடாமல் புறக்கணித்தது ஜனநாயக விரோதச் செயல்!

## ‘தினகரன்’ தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, மே 27-

புதிய நாடாளுமன்றக் கட்டிடத் திறப்பு விழாவுக்கான அழைப்பிதழில் கூட குடியரசுத் தலைவர் முர்முவின் பெயரை அச்சிடாமல் பா.ஜ.க. அரசு புறக்கணித்தது ஜனநாயகத்துக்கு விரோதமான செயல் என்று ‘தினகரன்’ நாளேடு 26.5.2023 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து அத்தலையங்கம் வருமாறு:-

டெல்லியில் 96 ஆண்டுகள் பழமையான நாடாளுமன்றத்திற்குப் பதிலாக புதிய நாடாளுமன்ற கட்டிடம் கட்ட பிரதமர் மோடி கடந்த 2020ம் ஆண்டு அடிக்கல் நாட்டினார். 4 மாடிகள் கொண்ட புதிய நாடாளுமன்றம் கட்டுவதற்கு ரூ.977 கோடி என மதிப்பிடப்பட்ட நிலையில், பல்வேறு காரணங்களால் அதன் செலவு ரூ.1,250 கோடியாக அதிகரித்தது. கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலையில் மே 28-ம் தேதி சாவர்க்கரின் பிறந்தநாளில் இந்த கட்டிடத்தை பிரதமர் மோடி திறந்துவைக்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது. இந்திய ஜனநாயக பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் பிரமாண்ட அரசியல் சாசன அரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டிட திறப்பு விழாவுக்கு அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்பட்டு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. இந்த அழைப்பிதழில் நாட்டின் முதல் குடிமகனான ஜனாதிபதி பெயர் இடம்பெறாதது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மக்களவை, மாநிலங்களவை இரண்டுமே ஜனாதிபதி அனுமதியுடன் தான் கூட்டப்படுகிறது. நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்களவையில் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் ஜனாதிபதி ஒப்புதலுடன் தான் சட்டமாக்கப்படுகிறது. இப்படி



தினகரன்
மே 26, 2023 வெள்ளிக்கிழமை
புறக்கணிப்பு
டெல்லியில் 96 ஆண்டுகள் பழமையான நாடாளுமன்றத்திற்கு பதிலாக புதிய நாடாளுமன்ற கட்டிடம் கட்ட பிரதமர் மோடி கடந்த 2020ம் ஆண்டு அடிக்கல் நாட்டினார். 4 மாடிகள் கொண்ட புதிய நாடாளுமன்றம் கட்டுவதற்கு ₹977 கோடி என மதிப்பிடப்பட்ட நிலையில், பல்வேறு காரணங்களால் அதன் செலவு ₹1,250 கோடியாக அதிகரித்தது. கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலையில் மே 28ம் தேதி சாவர்க்கரின் பிறந்தநாளில் இந்த கட்டிடத்தை பிரதமர் மோடி திறந்து வைக்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது. இந்திய ஜனநாயக பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் பிரமாண்ட அரசியல் சாசன அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டிட திறப்பு விழாவுக்கு அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்பட்டு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. இந்த அழைப்பிதழில் நாட்டின் முதல் குடிமகனான ஜனாதிபதி பெயர் இடம்பெறாதது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இருக்கையில் புதிய நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழாவுக்கு ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கு அழைப்பு விடுக்காமல், அவர் பெயரை அழைப்பிதழில் கூட அச்சிடாமல் புறக்கணித்துள்ளது ஜனநாயகத்துக்கு விரோதமாக இருக்கிறது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

இதனால் புதிய நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழாவை தி.மு.க., காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், ஐ.ஐ.த., ஆம்ஆத்மி, இந்திய கம்யூனிஸ்ட், யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட 19 எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளன.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாடாளுமன்ற கட்டிடம் ஒன்றிய பா.ஜ. அரசின் எதேச்சதிகாரத்தால் கட்டப்பட்டதை ஏற்கவில்லை. மேலும் ஜனாதிபதி முர்முவை புறக்கணித்துவிட்டு பிரதமர் மோடி தானே இந்த கட்டிடத்தை திறக்க முடிவு செய்திருப்பது ஜனநாயகத்தின் மீது நேரடியாக விழுந்த அடியாக கருதுவதாக எதிர்க்கட்சிகள் கூட்டாக தெரிவித்துள்ளன.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி, நாடாளுமன்ற கட்டிடம் அகங்காரம் என்னும் செங்கல்லினால் கட்டப்படவில்லை. மாறாக அரசியல் சட்ட மதிப்புகளின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது என கண்டித்துள்ளார்.

ஆனால், நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழாவை எதிர்க்கட்சிகள் அரசியலாக்க கூடாது. 100 வருடங்களுக்கு பிறகு புதிய நாடாளுமன்ற கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட உள்ளது. இதை புறக்கணிப்பது பிரச்னையில்லாத ஒன்றை பிரச்சினையாக்குவது போலாகும். எனவே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விழாவில் பங்கேற்க வேண்டும் என்று பா.ஜ.க. வேண்டுகோள் விடுத்துள்ளது. ஆனால் ஜனாதிபதியை புறக்கணித்துவிட்டு புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை திறக்க அனுமதிக்க கூடாது என்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்காக சட்டம் இயற்றும் ஒரு புனிதமான கட்டிடம் திறப்பதற்கு முன்பே பல்வேறு சர்ச்சைகள், பிரச்சினைகளில் சிக்கியுள்ளது மக்களிடைய கடும் அதிருப்தியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழாவுக்கு ஜனாதிபதி முர்முவை ஒன்றிய பா.ஜ.க. அரசு அழைப்புவிடுக்க வேண்டும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியில் அவருக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும். எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பில் ஒரு நியாயம் இருப்பதை ஒன்றிய அரசு புரிந்து கொண்டு ஜனநாயக முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்கி

# நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக இளைஞர் அணி சார்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள்!



## நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் அறிவிப்பு!

**நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக இளைஞர் அணி சார்பில் மாநில இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனைகளை விளக்கி தெருமுனைக் கூட்டங்கள் நடைபெறும் இடங்களை மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவித்துள்ளார்.**

| தேதி & நேரம் | தலைமை கழக பேச்சாளர்கள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் |
|---|---|---|---|
| 28.05.2023 - 4 மணி | ஆடுதுறை உத்திராபதி | மோகனூர் மேற்கு ஒன்றியம் | மணப்பள்ளி |
| 28.05.2023 - 5 மணி | ஆடுதுறை உத்திராபதி | மோகனூர் மேற்கு ஒன்றியம் | வாழவந்தி |
| 28.05.2023 - 6 மணி | ஆடுதுறை உத்திராபதி | வேலூர் பேரூர் | வேலூர் |
| 28.05.2023 - 7 மணி | ஆடுதுறை உத்திராபதி | பொத்தனூர் பேரூர் | பொத்தனூர் |
| 28.05.2023 - 8 மணி | ஆடுதுறை உத்திராபதி | மோகனூர் மேற்கு ஒன்றியம் | பாலப்பட்டி |
| 29.05.2023 -4 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | எலச்சிபாளையம் ஒன்றியம் | பெரியமணலி |
| 29.05.2023 – 5 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | எலச்சிபாளையம் ஒன்றியம் | எலச்சிபாளையம் |
| 29.05.2023 – 6 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | எலச்சிபாளையம் ஒன்றியம் | மாணிக்கம்பாளையம் |
| 29.05.2023 – 7 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | எலச்சிபாளையம் ஒன்றியம் | காந்தி ஆசிரமம், மோளிப்பள்ளி |
| 30.05.2023 – 4 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | பரமத்தி ஒன்றியம் | நடந்தை |
| 30.05.2023 – 5 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | பரமத்தி ஒன்றியம் | மேட்டுக்கடை |
| 30.05.2023 – 6 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | பரமத்தி ஒன்றியம் | கூடச்சேரி |
| 30.05.2023 – 7 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | பரமத்தி பேரூர் | பரமத்தி |
| 30.05.2023 – 8 மணி | பசும்பொன் ரவிச்சந்திரன் | பாண்டமங்கலம் பேரூர் | பாண்டமங்கலம் |
| 30.05.2023 - 4 மணி | போடி கமராஜ் | திருச்செங்கோடு ஒன்றியம் | பேருந்து நிலையம், பால்மடை |
| 30.05.2023 – 5 மணி | போடி கமராஜ் | திருச்செங்கோடு ஒன்றியம் | விட்டம்பாளையம் |
| 30.05.2023 – 6 மணி | போடி கமராஜ் | திருச்செங்கோடு ஒன்றியம் | மொளசி ரோடு, இறையமங்கலம் |
| 30.05.2023 – 7 மணி | போடி கமராஜ் | திருச்செங்கோடு ஒன்றியம் | T.கைலாசம்பாளையம் |
| 30.05.2023 – 4 மணி | சேலம் சுஜாதா | பள்ளிபாளையம் நகரம் | பேருந்து நிலையம், அக்ரஹாரம் |
| 30.05.2023 – 5 மணி | சேலம் சுஜாதா | பள்ளிபாளையம் நகரம் | கண்டிபுதூர் |
| 30.05.2023 – 6 மணி | சேலம் சுஜாதா | பள்ளிபாளையம் நகரம் | ஆவாரங்காடு |
| 30.05.2023 – 7 மணி | சேலம் சுஜாதா | ஆலாம்பாளையம் பேரூர் | ஆலாம்பாளையம் |
| 31.05.2023 - 4 மணி | போடி காமராஜ் | பள்ளிபாளையம் ஒன்றியம் | கொக்கராயன்பேட்டை |
| 31.05.2023 – 5 மணி | போடி காமராஜ் | பள்ளிபாளையம் ஒன்றியம் | காடச்சநல்லூர் |
| 31.05.2023 – 6 மணி | போடி காமராஜ் | பள்ளிபாளையம் ஒன்றியம் | தட்டாங்குட்டை |
| 31.05.2023 – 7 மணி | போடி காமராஜ் | பள்ளிபாளையம் ஒன்றியம் | கல்லாங்காட்டுவலசு |
| 31.05.2023 - 4 மணி | சேலம் சுஜாதா | குமாரபாளையம் நகரம் | சின்னமநாயக்கன் பாளையம் |
| 31.05.2023 – 5 மணி | சேலம் சுஜாதா | குமாரபாளையம் நகரம் | ஆனங்கூர் பிரிவு |
| 31.05.2023 – 6 மணி | சேலம் சுஜாதா | குமாரபாளையம் நகரம் | அம்மன் நகர் |
| 31.05.2023 – 7 மணி | சேலம் சுஜாதா | படைவீடு பேரூர் | படைவீடு |

**எஸ்.எம்.மதுரா செந்தில்**
செயலாளர், நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.

### மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில்

# நெல்லை மாநகர செயற்குழுக் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் அறிவிப்பு!

நெல்லை.மே.27-

நெல்லை மாநகர கழக செயற்குழு கூட்டம் மே 30-செவ்வாய்க்கிழமை அன்று மாலை 5 மணி அளவில் நெல்லை டவுண் லெட்சுமி திருமண மஹாலில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் நடைபெறுகிறது என நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை மாநகர கழக செயற்குழு கூட்டம் 3005 2023 செவ்வாய்க்கிழமை அன்று மாலை 5 மணி அளவில் நெல்லை டவுண் லெட்சுமி திருமண மஹாலில் வைத்து நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன் (தச்சை)நமச்சிவாயம் என்ற கோபி (நெல்லை) அன்டன் செல்லத்துரை (பாளை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்) ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாநில மகளிர் அணி செயலாளர்,பாளை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஹெலன்டேவிட்சன், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர், நெல்லை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா, மாநில தணிக்கை குழு உறுப்பினர் சுப.சீதாராமன், மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ.பெருமாள், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லெட்சுமணன், பேச்சிப் பாண்டியன், மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், துணை மேயர் ராஜு ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்வில் மாநகர கழக, பகுதி கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாநகர சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நெல்லை மாநகராட்சி கழக மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா.

2. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

# கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தி.மு.க, இளைஞர் அணி சார்பில் ஒன்றியம், நகரம், பேரூர் வாரியாக தெருமுனைக் கூட்டங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு மக்களுக்காக நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி, நாடே போற்றி பாராட்டும் வகையில் நல்லாட்சி நடத்தி வரும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கி மாவட்டந்தோறும் இளைஞர் அணி சார்பில் தெருமுனைக்கூட்டங்களை நடத்திட வேண்டுமென்று கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்தில் இளைஞர் அணி சார்பில் தெருமுனை கூட்டங்கள் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறுகிறது.

**ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி தேதி 28.05.2023**

| ஒன்றியம் / பேரூர் | இடம் | நேரம் | தலைமைக் கழக பேச்சாளர்கள் |
|---|---|---|---|
| மணலூர்பேட்டை பேரூர் | கடை வீதி | மாலை 5.00 | ஊடகவியலாளர் |
| ரிஷிவந்தியம் கிழக்கு ஒன்றியம் | ஜம்பை | இரவு 7.00 | உமா |
| ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றியம் | யால் | மாலை 5.00 | |
| ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றியம் | அத்தியூர் | மாலை 6.00 | கரூர் முரளி |
| சங்கராபுரம் வடக்கு ஒன்றியம் | புதுப்பட்டு | இரவு 7.00 | |
| திருக்கோவிலூர் மேற்கு ஒன்றியம் | அருதங்குடி | மாலை 5.00 | |
| திருக்கோவிலூர்தெற்கு ஒன்றியம் | டி. கீரனூர் | மாலை 6.00 | பொன்னேரி சிவா |
| திருக்கோவிலூர் வடக்கு ஒன்றியம் | சோழவாண்டியபுரம் | இரவு 7.00 | |

**கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி தேதி 28.05.2023**

| ஒன்றியம் / பேரூர் | இடம் | நேரம் | தலைமைக் கழக பேச்சாளர்கள் |
|---|---|---|---|
| கள்ளக்குறிச்சி தெற்கு ஒன்றியம் | பெருவங்கூர் | மாலை 5.00 | தமிழ் கா.அமுதரசன் |
| கள்ளக்குறிச்சி நகரம் | மந்தைவெளி | இரவு 7.00 | |
| சின்னசேலம்கிழக்கு ஒன்றியம் | அம்மையகரம் | மாலை 5.00 | ஈரோடு இறைவன் |
| சின்னசேலம் தெற்கு ஒன்றியம் | கீழ்குப்பம் | இரவு 7.00 | |
| தியாகதுருகம் தெற்கு ஒன்றியம் | விருகாவூர் | மாலை 5.00 | ஆரணி மாலா |
| தியாகதுருகம் வடக்கு ஒன்றியம் | தியாகை | மாலை 6.00 | |
| தியாகதுருகம் பேரூர் | தியாகதுருகம் பேருந்து நிலையம் அருகில் | இரவு 7.00 | |

எனவே மேற்குறிப்பிட்டுள்ள பிரச்சார கூட்டங்களை அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஒத்துழைப்புடன் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் இளைஞரணி நிர்வாகிகள் இணைந்து கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணி நிர்வாகிளுக்கும் தகவல் கொடுத்து இக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பாக நடத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**வசந்தம் க.கார்த்திகேயன்**, Bsc., MLA,
செயலாளர்
கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.